அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண்**:14/2017
**தேதி**:25.1.2017

## குடியரசு தினம்

ஆங்கிலேயர்களின் பிடியில் பல ஆண்டுகளாக இருந்த நமது இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக நாட்டின் பல பகுதியிலிருந்து போராடிய சுதந்திர போராட்ட வீரர்களையும், ரத்தம் சிந்தி உயிர் இழந்தவர்களையும், வீரர்களையும், புரட்சியாளர்களையும் நினைவுகூறும் நாள் குடியரசு தினமாகும்.

இந்திய விடுதலைக்குப் பிறகு, மக்களாட்சியால் மட்டுமே சிறப்பான வளர்ச்சியை அடையமுடியும் என்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் தலைமையில் இந்திய அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு 1950 ஜனவரி 26 முதல் குடியரசு தினமாக கொண்டாடப்பட்டுவருகிறது.

மக்களுக்கு அனைத்து வகையிலும் பாதுகாப்பையும், முன்னேற்றத்தையும், சமத்துவத்தையும் உறுதிசெய்வதுதான் மக்களாட்சியின் தத்துவம். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான நம் இந்திய நாட்டில் ஜாதி, மதம், மொழி என பல வேறுபாடுகள் இருந்தாலும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதில் பெருமிதம்கொண்டு 68 வது குடியரசு தினத்தை கொண்டாடும் இந்த நாளில் நம் தேசத் தலைவர்களையும், சுதந்திரத்திற்காக பாடுபட்ட நம் முன்னோர்களையும் நினைவு கூறுவோம்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்